


# பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும்.

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

www.banukumar.in

ஞாலத்தில் தோன்றிய உயிர்கள் நல்லநிலை பெற்று உய்வடைந்திட பல சான்றாளர்கள், ஞானிகள், மகான்கள் போன்றோர் உதித்து நம்மை நல்நெறி நோக்கோடு தெய்வீக வாழ்க்கையை வாழ அருளிச் சென்றுள்ளனர்.

அந்த வழியில் பட்டினத்தாரும் வேதாத்திரி  மகரிசியும் இப்புவியில் தோன்றி நம்மை-நாம் உணர்ந்திடவும் இன்ப வாழ்வினை எய்தவும் உண்மை விளம்பியாய் வழிகாட்டி நிற்கிறார்கள்.

- பட்டினத்தார் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிலும் வேதாத்திரி மகரிசி கி.பி. 20 ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள்.
- பட்டினத்தார் காவிரிப்பூம்பட்டினத்தில் தோன்றி சென்னைத் திருவொற்றியூரில் நிறைவு பெற்றவர். வேதாத்திரி மகரிசி கூடுவாஞ்சேரியில்  அவதரித்து ஆழியாறில் நிறைவு பெற்றவர்.
- பட்டினத்தார் செல்வந்தர் குடியிலே பிறந்து துறவியானவர். பேய்க்கரும்பும் இனிக்கக் கண்ட பேரருளாளர்.  வேதாத்திரி மகரிசி நெசவாயின் மகானாக பிறந்தவர்.
- பட்டினத்தார்  பாடிய பாடல்கள் பட்டினத்தார் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன.  வேதாத்திரி மகரசி பாடியது பேசியது வேதாத்திரியம;        என்றழைக்கப்படுகிறது.
- பட்டினத்தாரைப் பற்றியும் வேதாத்திரி மகரிசி பற்றியும் நமது நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள்.
- இருவருடைய பாடல்களைப் பலரும் படிக்கின்றனர்.  அவர்கள் சொல்லியருக்கும் வேதாந்தக் கருத்துக்களைப் பலரும் போற்றுகின்றனர்.
- இருவருடைய பாடல்களைப் உள்ளம் உருகிப் பாடுவதைக் கேட்கின்றோம்.
- இருவருடைய பாடல்களும் மனப்பாடம் செய்வது எளிது.
- இருவருடைய பாடல்களும் படிப்பதற்கும், பாடுவதற்கும் இனிமையானவை.
- இருவருடைய பாடல்களும் பலருக்கும் பொருள் விளங்கும் எளிய நடையில் இயன்றவை.

- தமிழ் மொழி, மக்களுக்குப் புரியும் வகையிலும் மக்களோடு இணைந்து எப்படி வளர்ந்து வந்திருக்கின்றது என்பதற்கு இவ்விருவர் பாடல்களையும் உதாரணமாகக் கொள்ளலாம்.
- மொழியின் வளர்ச்சியில் மட்டும் அன்று.. கருத்திலும் இவ்விருவர் பாடல்களிலும் வளர்ச்சியைக் காணலாம்.
- அவர்கள் பாடல்களிலே மத வெறுப்பைக் காண முடியாது.
- இவர்களது கவிதைகள் படிப்போர் உள்ளத்தை ஈர்க்கின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன. அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றன. ஆன்மிக உணர்வு பொங்கச் செய்கின்றன.
- பட்டினத்தார் கொடை பட்டினத்தார் பாடல்கள். வேதாத்திரி மகரிசி வேதாத்திரியம் .
- மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற் ம் எல்லாம் இணைந்து , இணக்கமாகி. இவர்களை ஓர் இணையற்ற மகான்களாக உருவாக்கியிருக்கின்றன.
- எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது பாடல் வரிகளில், மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.
- பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும் தம் எழுத்துக் கைகளால் இந்த தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாயக் கடமையாய்க் கொண்டிருந்தனர்.
- பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும், பிற்போக்குச் சக்திகளைபிடித்து உலுக்கி, முற்போக்குக் கருத்துகளை முன் வைப்பவர்கள்.
- பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும், துருபிடித்த வார்த்தைகளைத் தூரத்தள்ளி, சுறுசுறுப்புக்குச் ப சொற்களுக்குச் சூடேற்றியவர்கள்.
- இவர்களது எழுத்துக்களில் நிறுத்தக் குறிகள் கூட நெருப்புத் திரிகள். இவர்கள் கவிதைகள், சொற்களில் வடித்த சுடுசோறு. சமுதாயம் பசியாறும்
- இருவரும் எந்தத் தெய்வத்தையும் இகழ்ந்து பேசியதில்லை. எந்த மதங்களையும் கண்டித்துப் பாடவில்லை. யாரிடத்திலும் அவர்கள் வெறுப்புக் காட்டவில்லை.

- அன்பு, அருள், அறிவு, இன்பம் , ஒளி இவைகள் தெய்வ வடிவம் என்று இவர்கள் காட்டும் தத்துவங்கள் அனைவருக்கும் பொதுவானது.
- பட்டினத்தார், வேதாத்திரி மகரிசி இருவரும் வெறும் தத்துவ ஞானிகள் மட்டும் அல்லர். உலக அனுபவம் நிறைந்தவர்கள். இதனை அவர்கள் பாடல்களிலே காண முடிகின்றது.
- உலகில் நடைபெறும் வஞ்சனை, சூதுகளையெல்லாம எடுத்துக் காட்டிப் பாடியிருக்கின்றனர். உலகில் உள்ள மக்களின் பலதிறப்பட்ட பண்புகளையெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். மக்கள் அனைவரும், ஒன்றுபட்டுச் சமாதானமாக வாழ்வதற்கு இவர்களின் பாடல்கள் வழிகாட்டுகின்றன.
- மக்களுக்கு அறிவுரையும், சன்மார்கத்தையும் போதிக்கும் பட்டினத்தார் பாடல்களும், வேதாத்திரி மசரிசிப் பாடல்களும், தமிழ் மக்கள் அனைவராலும் போற்றப்படுகின்றன.
- வேதாத்திரி மகரிசி பாடல்களிலே சமரச எண்ணம் மேலோங்கி நிற்கும். யாரிடமும் வெறுப்புக் காட்டியதில்லை. தன்னைத்தானே இரங்கும் எளிமை படைத்தவர். தத்துவக் கருத்துகள் தளர்நடையிடும். உலக ஞானம நிறைந்தவர். அன்றாடம் வாழ்க்கையில் நடைபெறும வஞ்சம், சூதுவாதுகளையெல்லாம பாடியிருக்கின்றார். மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழும் உணர்வை ஊட்டும் கருத்துகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் அவருடைய பாடல்கள் விளக்குகின்றன.
- பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்.
- பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றி புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த ஞானிகள்.
- பட்டினத்தார் தன் எழுதுகோலில் விட்டுவைத்த மையின் மிச்சத்தை, மகரசி தன் எழுதுகோலில் நிரப்பிக் கொண்டு முடித்து வைத்தார்,

- ஒரு யுக விழிப்பை ஏற்படத்துவதே இவர்களது இருவரது இலக்காக இருந்திருக்கிறது. அந்த முயற்சியிலே இவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

இவ்வாறு பல ஒற்றுமையுடன் விளங்கும் மகான்கள் ”மானுடம் போற்றும் மகான்களாக” போற்றப்படுகிறார்கள்.

காலம் சில மகாகவிகளை நிர்ணயத்தாற் போவவே, பட்டினத்ரையும் வேதாத்திரி மசரியையும் நிர்ணயித்திருக்கிறது.

## கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்

“கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்து உருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய் கச்சி ஏகம்பனே”(பட்.பா.13)

கண் போன்றது கல்வி. இவ்வுலக வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது கல்வி.

கல்வியால் பெறும் நற்பலன் நல்லறிவு பெறுதல். ஞான அறிவு பெறுதல். அதனால் இறைஞானம் உண்டாகும்.

எனவே நாம் வாழ நம்மிடம் உள்ள எல்லாப் பிழையும் நீங்க நல்லறிவு, ஞான அறிவுபெற ஆண்டவனை வழிபடுவோம்.

அறிவு நூல்களைக் கற்காத பிழை - இறைவனை நினைத்து மனம் உருகி நில்லாத பிழை –

இறைவனது திருநாமம் ஆகிய திருவைந்தெழுத்தைச் சொல்லாத பிழை –

இறைவனாகிய உன்னைத் துதிக்காமல் இருந்த பிழை –

உன்னைத் தொழாத பிழை –

இவ் எல்லாப் பிழைகளையும் பொறுத்து எனக்குக் கருணை செய்வாயாக! கச்சி ஏகம்பப் பெருமானே - 136

நம் வாழ்வில் செய்த பிழைகளை உணர்ந்து வருந்தாமல் பண்புப் பயிற்சி பெற அழைக்கிறார் வேதாத்திரி மகரிசி.

”விழிப்புநிலை என்ற ஒரு வெளிச்சம் கொண்டு,
விருப்புவெறுப் பெனும் சுழலில் அலை மனத்தின்
அழுக்கைத்தற் சோதனையால் துடைத்து வந்தால்
அன்பூறும். கடமை உணர்வாகும் வாழ்வு.
பழுத்துவரும் அறிவு அந்தப் பக்கு வத்தால்
பலப்பலவாய் வாழ்வில் வளர் சிக்கல் தீரும்.
முழுக்கல்வி இது. உண்மை அறிவிற்கு எட்டும்.
முறையாகப் பயின்றிடுவீர்! வெற்றி காண்பீர்”(ஞாக.பா.555)

நாம் காணும் இந்தப் பிரபஞ்சத்திலே எல்லாமே இரட்டைகளாகத்தான் உள்ளது.

பாதகங்களைத் தவிர்த்து சாதகங்களைப் பயன்படுத்தி வாழ்ந்தால் இனிமையாக வாழ முடியும்.

அந்தவகையில் மனித அறிவின் இரட்டைகள், ஒன்று விழிப்புநிலை, இரண்டு மயக்கநிலை,

மனிதர்களாகிய நீங்கள் விழிப்புநிலை என்ற ஒளியைக் கொண்டு. விருப்பு வெறுப்பு என்ற இரட்டைகளால் மனதில் ஏற்பட்டுள்ள களங்கத்தை நீக்க வேண்டும்.

தற்சோதனை என்னும் சாதனத்தைக் கொண்டு மனதின் களங்கத்தைப் போக்கி வாழ்ந்தீர்களேயானல் தெய்வீகமாகிய அன்பு ஊறும். கடமை உணர்வாகும்.

அறிவு தெளிவு பெறுவதால் ஏற்படும் பக்குவத்தால் அவ்வப்போது வாழ்க்கையில் உருவாகும் பலவகைச் சிக்கல்களும் தீரும். இதுவே உண்மையான வாழ்க்கைக் கல்வியாகும்.

உங்களது அறிவுத் திறனுக்கேற்ப கற்றுக் கொள்ளுங்கள். வாழ்வில் வெற்றி காண்பீர்கள்.

விருப்புவெறுப்பைத் தவிர்க்க, தற்சோதனையின்மூலம் மனக் களங்கத்தை நீக்கி மனிதப் பண்பை உயர்த்திக்கொள்ள வேண்டியது அனைவருக்கும் அவசியமானது ஆகும்.

## வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்

வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய் வினைதான் ஒழிந்தால்
தினைப் போதளவு நில்லாது கண்டாய் சிவன் பாதம் நினை
நினைப்போரை மேவு நினையாளர் நீங்கி இந்நெறியினின்றால்
உனைப்போல் ஒருவர் உண்டோ மனமே எனக்கு உற்றவரே. (பட்.பா.7

இந்த மானுடப் பிறவியே நாம் செய்த முற்பிறவி வினைகளினால்தான் என்பதை உணர்ந்திருக்கிறோம்;

அவ்வினைகள் நீங்கிவிட்டால் இந்த உடல் ஒரு நொடிப்போதும் இப்பூவுலகில் இல்லாமல் நீங்கிவிடும் என்பதும் உணர்ந்திருக்கிறோம்;

ஆனபடியால் எம்பிரான் ஈசனின் பாதாரவிந்தங்களை எப்போதும் மனதால் நினை; அப்படி சிவ சிந்தனையில் திளைத்திருப்போரின் துணையையும் எப்போதும் நாடு;

இறை சிந்தனை இல்லாமல் அவனின்றும் நீங்கி நிற்பார்தம் உறவினை நீக்கிவிடு; இப்படி நீக்குவன நீக்கி, சேர்வன சேர்ந்து வாழ்ந்தால் அவனைப் போல இறைவனருள் பெற்றவர் வேறு எவரும் இலர் என்பதை உணர்ந்து கொள் என்கிறார் பட்டினத்தார்.

வினைகளைப் அழிக்க வழிகாட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

மனம் தூய்மை பெறாமல் வினைகள் தூய்மை பெற முடியாது என்று பாடுகிறார் வேதாத்திரியார்.

”வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை
வேண்டுவது இன்றியமை யாததாகும்.
வினைத்தூய்மை ஒழுக்கமுடன் கடமை, ஈகை,
விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.
வினைத்தூய்மை வித்தான மனத்தின் தூய்மை
விண்ணுணரும் அகத்தவத்தால்ஓங்கும் உய்ய.
வினைத்தூய்மை மனத தூய்மை ஒன்றை ஒன்று
உயர்த்தி மனிதன் தெய்வ மறியச் செய்யும். ((ஞாக.பா.1286)

வினை என்பது செயல் ஆகும். தூய்மையான உயர்வான, தீங்கு வராத குற்றமற்ற நன்மை தரத் தக்க செயல்களைச் செய்ய வேண்டுமானால், அதற்கு முதலில் செய்ய வேண்டியது மனத் தூய்மையாகும்.

மனம் தூய்மை பெறாமல் வினைகள் தூய்மை பெற முடியாது. மனம் என்பது ஒரு பொருள் அல்ல.

அனுபோக, அனுபவங்களாக உள்ள எண்ணங்களே ஆகும். எண்ணம்தான் செயலாக மலர்கிறது.

அறநெறிகளான ஒழுக்கம், கடமை , ஈகை மூன்றையும் கடைப்பிடித்தால் வினைத்தூய்மை கிட்டும்.

வினைத் தூய்மைக்கு மூலமாக உள்ள மனதின் தூய்மைக்கு, விண் எனும் உயிரை உணர்கின்ற அகநோக்குப் பயிற்சியாகிய தவத்தின் மூலம் கிட்டும் எண்ணமே செயலாகி விளைவாகிறது.

அந்த விளைவே எண்ணமாகி மீண்டும் செயலாக மலர்கிறது. தொடர்ந்து இந்நிலை மனித வாழ்வின் இயல்பாகவே உள்ளது.

வினைத் துய்மைமனத் தூய்மைக்கு உதவியாகிறது. மனத் தூய்மை வினைத் தூய்மைக்கு உதவியாகிறது.

இரண்டுமேஒன்றை ஒன்று உயர்வடையச்செய்து மனிதனை தெய்வ நிலையை அறியச் செய்யும்.

”வினைத்தூய்மை அனைவர்க்கும் இன்பம் நல்கும்.
விரிந்த மனத்தூய்மை மெய்ஞ்ஞானம் ஈட்டும்.
வினைத்தூய்மை மனத்தூய்மை உயிர்க ளுடே
உயர்அன்பு தொண்டு ஈகை உண்டுபண்ணும்.
வினைத்தூய்மை மனதூய்மை பெறுதற் கென்றே
வேதம்மதம் உணர்நூல்கள் விரிந்ததாகும்.
விதைத்தூய்மை மனத்தூய்மை வெறுப் பொழித்து
விழிப்புநிலை, அன்பு இரக்கம் இயல்பாய் ஆக்கும்.” ((ஞாக.பா.1287)

மனிதர்கள் நலம், தீது என்று பிரித்துணர்ந்து செயலாற்றும் ஆறாவது அறிவு இருந்தும் குறையறிவின் காரணமாக பழக்கத்தின் வழியே

பல பிறவிகளில் வாழ்ந்து வந்த நிலையால், துன்ப வாழ்வையே அனுபவிக்கிறார்கள்.

ஆகவே திருத்தம் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது.

பழக்ககங்களை விளக்க வழியில் செயலாற்றினால் எல்லோருக்குமே இன்பம உண்டாகும்.

செயலுக்கு மூலமான மனதைத் தூய்மை செய்வதால் மனவிரிவு ஏற்பட்டு மெய்யுணர்வை மலர்த்தும்.

மனத் தூய்மையும் வினைத் தூய்மையும் உடன் வாழும் உயிர்க ளுககிடையில் உயர்வான அன்பை வெளிப்படுத்தி, தொண்டு மனப்பான்மையையும், பிற உயிர்க்கும் உதவும் ஈகை குணமும் உருவாகும்.

மனித குலத்திற்கு மனத்தூய்மையும் வினைத் தூய்மையும் அவசியமானதாகையால், அவற்றை மக்கள் கடைபிடித்து வாழ்வதற்கென்றே வந்தவைகள் தான் வேதம், மதம், உயர்நூல்கள் ஆகும்.

வினைத்தூய்மையும் மனத் தூய்மையும் சினத்தின் மறறொரு வகையான வெறுப்புணர்வை ஒழித்து விடும்.

விளைவறிந்த விழிப்பு நிலையானது அன்பையும், இரக்கத்தையும் இயல்பானதாக ஆக்கிவிடும்.

## ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு

கடவுள் ஒருவரே அவர் எங்கும் உள்ளவர் எல்லாம் வல்லவர் என்னும் கருத்தைப் பட்டினத்தார் தம் நெஞ்சுக்குக் கூறுவதுபோல் அமைந்துள்ள பாடல் ஒன்றில் சொல்லுகிறார்.

"ஒன்றறென்றிரு தெய்வம்

உண்டென்றிரு!"

கடவுள் பலராகவிருத்தல் முடியாது. பல பொருள்களுள் ஒன்று சிறப்புடையதாயிருக்கும்.

உலகத்தை ஒழுங்காகப் படைப்பதற்கும் காப்பதற்கும் அழிப்பதற்கும் ஒரே தலைவனே இருத்தல் வேண்டும்.

பலர் இருப்பின், அவருள் வேறுபாடு விளைந்து நடைபெறுந் தொழில்களும் முரண்படும்.

எவ்வகையான வேறுபாடும் இலலையெனின் பன்மைக் கருத்திற்கு இடமில்லை. எனவே அறிவுடைய பரம்பொருள் ஒன்றே என்பது தெளியப்படும்.

இந்தக் கருத்தை வள்ளலாரும் தம் பாடல்களில் விரிவாகச் சொல்கிறார்.

"எல்லாம் வல்லவராக ஓங்கி விளங்குகின்ற தனிக் கடவுள் ஒருவரே" எந்த இடத்திலும் எந்த உயிரிலும் விளங்கித் தோன்றுகின்ற சிவமாகிய தெய்வம் ஒன்றுதான்!" இரண்டு இல்லை!

தெய்வம் ஒன்றுதான் என்பதை நான் உணர்ந்து அந்த நெறியில் நின்றேன். அதனால் மெய்ஞ்ஞான நிலையை நான் பெற்றேன்.

ஞான சித்திகளையெல்லாம் பெற்றேன். எந்த பொருளு
க்கும் எந்த உயிருக்கும் உள்ளேயும், வெளியேயும் இருந்து உண்மை அறிவு இன்பவடிவமாகி ய, இயங்கும் மெய்ப் பொருளாகிய தெய்வம் ஒன்றுதான் என்பதை நான் அறிந்து கொண்டேன்" என்கிறார்.

"ஓண்தகு சிற்றம்பலத்தே எல்லாம் வல்லர்வராய்

ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர் உண்டே கண்டீர்!"

"எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இயங்கு சிவம் ஒன்றே

என் ஆணை என் மகனே, இரண்டில்லை ஆங்கே!"

ஒன்றே சிவம் என்றுணர்ந்தேன் உணர்ந்தாங்கு

நின்றே மெய்ஞ்ஞான நிலைபெற்றேன்-நன்றே மெய்ச் சித்தியெலாம் பெற்றேன்”

”எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்

இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்

மெய்ப் பொருளாம் சிவம் ஒன்றே என்றறிந்தேன்.”

கடவுள் ஒருவரே என்று சொன்ன பட்டினத்தார் எல்லாம் அவன் செயலே. அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பதையு ம தெளிவாகச் சொல்கிறார்.

## வேதாத்திரி மகரிசியின் கடவுட் கொள்கை

அருட்தந்தை வேதாத்திரி மகரிசியின் கடவுள் கொள்கை அறிவியல் பூர்வமானது. அற்பூதமானது. ஆனந்தமானது.

தற்காலத்திற்கும் ஏன் எதிர்காலத்திற்கும் பொருத்தமான சிந்தனையாக அமைந்துள்ளது.

மகரிசி, கடவுள் நிலையை மிகத் தெளிவாக இறை வணக்கப் பாடலிலேயே எடுத்துரைக்கிறார்.

”எல்லாம் வல்ல தெய்வம் அது எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கம் அவன் வாழ்வி ல உயிரில் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க் காணும் இன்பத் துன்பம் அவன்” (ஞா.க.1)

”அவனின் இயக்கம் அணு ஆற்றல் அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ, உன்னில் அவன் அவன் யார், நீ யார் பிரிவேது
அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி” (ஞா.க.2)

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம் என்பது வேதாத்திரி மகரிசியின் கடவுள் கோட்பாடாகும்.

ஒரு முழுமையான கடவுள் தத்துவத்தை மகரிசி நமக்குத் தருகிறார். அதன் இறைத் தத்துவம் பரமாத்மாவே ஜீவாத்மாவாக வருகிறது என்ற உபநிடதக் கருத்தும் ஒன்றே.

மூலமாகிய இறைவெளிக்குத் தன்னைத் தானே இறுக்கிக் கொள்ளும் இயல்பு உண்டு. இறைவெளியின் இந்தத் தன்னிறுக்கம்தான் அதன் தன்மாற்றத்திற்கான முழுமுதற் காரணம்.

எனவே, இந்தப் பிரபஞ்சத்தில் நாம் பார்க்கிற அனைத்தும் வெளியின் தன்மாற்ற வடிவங்களே என்கிறார் வேதாத்திரியார்.

மூலமாகிய வெளி ஞாலமானதின் விரிவான விளக்கமே வேதாத்திரியார் கூறும் விஞ்ஞானம்.

ஞாலத்தின் மூலத்தின் தன்மாற்றமாக உணர்வது தத்துவம். வெளி அரூபமானது. எல்லையற்றது.

" அவனின் இயக்கம் அணு ஆற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ" (ஞா.க.2)

என்ற வரிகள் மூலமாகவும்,

"பழுத்த நிலை வரும் வரையில் நீ. நான் என்போம்
பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்" (ஞா.க.)

என்ற வரிகள் மூலமாகவும் அணு முதல் அண்டம் வரை அனைத்தும் வெளியின் இயக்க நிலைகள்.

இத்தகைய ஒன்றாகக் காணுகின்ற அத்வைதக் காட்சியைத் தருகிறார் வேதாத்திரியார்.

"ஆதியென்ற பிரம்மமது கடல் போல் ஒன்று
அதிலெழுந்த ஜீவனெல்லாம் அலைபோல் ஆகும்
பேதமுடன் அலைகளவை விரிந்த போதும்

பிரியாது கடலைவிட்டுக் கடல் ஒன்றேனும்” (ஞா.க.1084)

கடலும் அதன் அலையும் போன்றதே பிரம்மமாகிய வெளியும் உயிர்களும் என்று மகரிசி மிகவும் எளிமையாகக் கூறியுள்ளார்.

வெளியாகிய கடவுளுக்கு ஆயிரம் பெயர்கள் உண்டு. ஒவ்வொரு பெயரும் ஒரு தெய்மென்று கருதுவது அஞ்ஞானம். தெய்வம் ஒன்று என்ற அத்வைத தத்துவத்தை உணர்வது மெய்ஞ்ஞானம்.

பிற மதங்களில் பலவாறாகக் கூறப்பட்ட மூலத்தை தூய தமிழில் ஆதி, அநாதி, தெய்வம், சிவம், ஏகம், பிரம்மம், கிராவிட்டி என்று அழைக்கிறார் வேதாத்திரியார்.

எல்லையற்ற வெளிதான் கடவுள். வெளியின் வெளிப்பாடே இப்பிரபஞ்சம். வெளிப்பாட்டின் முழு முதற் இயக்க விசை வெளியின் தன்னிறுக்கமே எனப் பலப்பல செய்திகளைத் தருகிறார் வேதாத்திரி மகரிசி.

”இறைநிலை தன்னிறுக்கத்தால் எழுந்த முதன் தன்மாற்றம் இறைத்துகளாம்
இறைத்துகள்கள் கூடியதோர் தொகுப்பே விண்
நிறைவெளியில் விண் சுழல வெளியழுத்த விளைவாக
விண்கரைய அக்கரைசல் வெளியேற
அனைத்து அலைகள் காந்தமாச்சு” - மகரிசி.

ஒன்றே பலவானது என்று வேத காலத்திலிருந்து சொல்லப்பட்டு வந்தாலும், அந்த ஒன்று பெருவெளியே என்று அனைவரையும் அறியச் செய்தவர் உணரச் செய்தவர் வேதாத்திரி மகரிசியே.

கடவுள் வழிபாடு

”கடவுளை வணங்கும் போது, கருத்தினை உற்றுப் பார் நீ!
கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியைக் காண்பாய் ஆங்கே”

என்று கடவுள் வழிபாட்டிற்கு அறிவியல் பார்வை தந்தவர் நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிசியே.

## கல்லில் கடவுளா?

நமது நாட்டிலே பிறந்த ஞானிகள் சிலர் உருவ வணக்கத்தைக் கண்டித்திருக்கின்றனர்.

எங்கும், எல்லாப் பொருள்களிலும் பரந்துள்ள இறைவனை ஒரு கல்லிலோ, ஒரு மரக்கட்டையிலோ, ஒரு செம்புப் பதுமையிலோ இருப்பதாக நினைப்பது அறியாமை என்று பலர் பாடியிருக்கின்றனர்.

சிறப்பாகச் சித்தர்கள் என்பவர்களிலே பலர் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

உலக நிலையாமையைப் எண்ணிப் எண்ணிப் பாடும் பட்டினத்தாரும் விக்கிரகங்களில் இறைவன் இல்லை என்றே பாடியிருக்கின்றனர்.

அவர் பாடியுள்ள பாடல்களிலே இரண்டு பாடல்களை இங்கு காண்போம்.

இறைவன் எங்கே இருக்கின்றான் என்று தேடித் திரிந்து தடுமாற வேண்டாம். அவன் சொல் வடிவமாக நிற்கின்றான். ஆதலால் சொல்லிலே இருக்கின்றான்.

"இறைவன் சொல்லின் பொருளாக. சொல்லின் முடிவான பொருளாக இருக்கின்றான்.

"சொற்களையும், சிறந்த பொருளையும் கொண்ட வேத மந்திரப் பாடல்களிலே இறைவனைக் காணலாம். வேத மந்திரங்களின் உருவமாக இறைவன் இருக்கின்றான்."

"இரவிலும் இறைவன் பரவியிருக்கின்றான்."

”குற்றமற்ற வான வெளியெங்கும் இறைவன் பரந்து நிற்கின்றான். உலகில் உள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்தவர்கள், எது உண்மை, எது பொய் என்ற உண்மையை அறிந்தவர்கள், பொய்யை விலக்கி உண்மையைப் பின்பற்றி நடப்பவர்கள் ஆகிய அருளுடையோர் உள்ளத்திலே இறைவன் இருக்கின்றான் என்றும் இருப்பான்.”

”யார் இறைவனையே எப்பொழுதும் நினைத்து அன்பு செலுத்துகின்றார்களோ அவர்களை விட்டு இறைவன் பிரியவே மாட்டான். எப்பொழுதும் அவர்களுடனேயே இணைந்து. இரண்டறக் கலந்து வாழ்வான்.”

”உண்மையாகவே இறைவன் இருக்குமிடம் எது? சொல், சொல்லின் பொருள், வேதம், இரவு, வானவெளி, தத்துவ ஞானிகள் உள்ளம், அன்பர்கள் மனம், இவைகள் ஈசன் இருக்கும் இடம்.

இவற்றை விட்டு கல்லையும், செம்மையும் கட்டிக் கொண்டு அழுவதனால் இறைவனைக் காண முடியுமா?

கல்லிலும் செம்பிலுமா எங்கள் இறைவன் வீற்றிருப்பான்? இல்லை. இந்த உண்மையை உணருங்கள்” என்று பாடினார் பட்டினத்தார்.


சொல்லினும், சொல்லின் முடிவிலும்,வேதச் சுருதியிலும்,

அல்லிலும், மாசற்ற ஆகாயம் தன்னிலும், ஆய்துவிட்டோர்

இல்லிலும், அன்பர் இடத்திலும் ஈசன் இருக்கும் இடம்.

கல்லிலும் செம்பிலுமோ இருப்பான்? எங்கள் கண்ணுதலே?

பட்டினத்தார் இன்னொரு பாடலிலும்- இறைவன் உருவங்களில் இல்லை என்பதை விளக்கிச்சொல்லுகிறார்.



”உளியிட்டுச் செய்த கல்லுருவத்தை வணங்க மாட்டேன். சுண்ணாம்பைக் கொண்டு, இறைவனுக்கு ஒப்பென்று அமைந்த சண்ணாம்புச் சிலையை வணங்க மாட்டேன்.

பிடித்த அழுக்காகிய களிம்பு போகும்படி புளியிட்டு விளக்கி வைக்கும் இஇஇஇ ம்பால் ஆகிய உருவத்தையும் வணங்க மாட்டேன்.

ஏனென்றால், கல்லுருவிலும், சுண்ணாம்புப் பதுமையிலும், செம்புச் சிலையிலும் தெய்வம் இருப்பதாக நம்புவது அறிவீனம்.”

”மாற்றுயர்ந்த பொன்போல் பிரகாசிக்கும் இறைவனுடைய இரண்டு பாதங்களையும் என் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டேன்.

இப்படிச் செய்வதுதான் உண்மையாக இறைவனைக் காணும் முறையாகும். இதுவே பிறர் அறியும்படி செய்யும் உண்மையாகும்.

இவ்வுண்மையை வெளியிட்டு, என் உள்ளத்திலே இரண்டு பாதமலர்களையும் அடைத்து வைத்தேன்.

இதன் பிறகு நான் வேறு ஒன்றையும் விரும்பவில்லை. இதுவே எனக்கு எல்லா இன்பங்களையும் தருவதாகும்” என்று சொல்லுகிறது பட்டினத்தாரின் அப்பாடல்.

”உளியிட்டகல்லையும், ஒப்பிட்ட சாந்தையும், ஊத்தை அறப்

புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன். உயர் பொன் எனவே,

ஒளியிட்ட தாள் இரணடு உள்ளே இருத்துவது உண்மை, என்று

வெளியிட்டு, அடைத்து வைத்தேன். இனிமேல் ஒன்றும் வேண்டிலனே!

உருவ வழிபாடு தேவையில்லை என்பது வேதாத்திரி மகரசியின் கருத்தாகும்.

வேதாத்தரி மகரசியின் உருவ வழிபாடு பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகள், இன்றைய வழிபாடு தொடர்பான சிக்கல்களைப் போக்கி அறிவுப் பூர்வமான வழிபாட்டிற்று வழிவகுப்பதை அறிய முடிகிறது.

இச்சையைத் தொழிலாக உடைய ஆன்மாவை அதன் போக்கிலிருந்து திருப்பிவிட வேண்டும் அதற்கு உளப்பயிற்சி அவசியம். இப்பயிற்சி அனுபவத்தால் வருகிறது. அதனை

1. ஓர்மை நிலை
2. அடக்க நிலை
3. ஒடுக்க நிலை

என்னும் மூன்று பிரிவுகளில் அடக்குகிறார் மகரிசி.

அறிவு செம்மையாகி அடங்கி லயமாக ம் பயிற்சி யெ ஆலயம் ஆகும். ஆ + லயம் = ஆலயம் எனபதில் மனத்தை ஒருமுகப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

இப்பணிக்கு அடிப்படை ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் ஆகும்.

இவற்றை உருவப் படிமங்கள் என்பது பொருந்தும். இந்த உருவங்களை வழிபடுவது என்னும் நிலை அதன் மூலம் மனத்தை ஒருமுகப்படுத்தும் மனநிலை இன்று பரவலாக வளர்ந்து வந்துள்ளது.

இந்த உருவ வழிபாட்டு வளர்ச்சியே சடங்குகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது.

விக்கிரக வழிபாடு எவ்வாறு வந்தது என்பது பற்றிய அவரது விளக்கம் அறிவார்ந்த நிலையில் அமைந்திருக்கிறது.

மனிதன் அவனைவிட மனத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவோ அல்லது உயர்த்திக் கொள்வதற்காகவோ கடவுளைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தான்.

இவனுடைய எண்ணம் குணங்கள் இவை எல்லாவற்றையும் கடவுளுக்கு ஏற்றி வைத்தான். இவனது தேவைகளைக் கடவுள் தேவையாகக் கருதினான்.

ஆதனால் உருவங்களைப் படைத்து அதில் அணிகலன்களை அணிவித்துச் சடங்குகளை இணைத்து வழிபடத் தொடங்கினான் என்று அறிவுப் பூர்வமான விளக்கத்தை மகரிசி தருகிறார்.

"உடல் நலம் அறிவோடு செல்வம் கீர்த்தி

ஒழுக்கம் வீரம் அழகு காதல் ஞானம்

கடமை உணர்வினைப் பெற்று இனிது வாழ

கற்பனையால் கருத்துயர்த்த நினைத்த முன்னோர்

உடல்நலம் முதலான ஆற்றலெல்லாம்

ஒன்றிணைந்து உருவமைத்து நம்புதற்கு

கடவுள் "கதைகள்" பலவும் கற்பித்தார்கள்.

கருத்துயர்ந் தோர்க்கு இச்சடங்கு தேவையில்லை" (மாக்.பக்.80)

என்று கூறுகின்றார். உருவ வழிபாட்டின் மூலம் இறைவனை வழிபடுவதைவிட அகத்தவத்தால் இறைவனை வழிபடுவதே சாலச் சிறந்தது எனக் கண்டுபிடித்துக் கூறுகிறார்.

## சிலை வணக்கத்தின் எல்லை.

"இறைநிலையே அறிவாக இருக்கும்போது

இவ்வறிவை சிலை வடிவத் தெல்லை கட்டி

குறை போக்கப் பொருள், புகழ், செல்வாக்கு வேண்டிக்

கும்பிட்டுப் பலன் கண்ட வரையில் போதும்

நிறை நிலைக்கு அறிவு விரிந்துண்மை காண

நேர்வழியாம் அகத்தவத்தைக் குருவால் பெற்று

முறையாகப் பயின்றுன்னில் இறையைத் தேட

முனைந்திடுவீர் காலம் வீணாக்க வேண்டாம்." (ஞாக.பா.1332)

என்று அறைகூவல் விடுத்து உருவ வழிபாட்டை விடுத்து அகத்தவ நிலைக்கு மானுடத்தை அழைக்கிறார் வேதாத்திரி மகரிசி.

## முறையான துறவு எது?

பல அறங்களையும் தவறாமல் செய்யும் இல்லற வாழ்க்கையுடையவன் சிறந்தவன். உயர்ந்தவன்.

அவனைக் காட்டிலும் அந்த இல்லற இன்பத்தையும் வெறுத்துத் துறவறத்தை மேற்கொள்ளுகிறவன் உயர்ந்தவன்.

"உற்ற உலகிய லோடொழுகி இல்லறம் ஆற்றிப்

பெற்ற அறிவின் உயர்வே பெருந்துறவு.

மற்றவழி முற்றாத காயதனை மூடிவைத்தே கனியப்

பெற்றது போலாகும் பிழை." (மாக்.பக.82

அவன் இல்லறத்தானைவிட கோடி மடங்கு உயர்தந்வன் என்கிறார் பட்டினத்தார்.

"அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்

துறந்தான். அவனில் சதகோடி உள்ளத் துறவு உடையோன்.

மறந்தான் அறக்கற்று அறிவோடு இருந்து இருவாதனை அற்று

இறந்தான் பெருமையை எனசொல்லுவேன். கச்சி ஏகம்பனே! (பட்.பா.5)



இப்பாடல் "செயற்கரிய செய்வர் பெரியர்" என்ற திருக்குறளின் கருத் தோடு இசைந்திருப்பதைக் காணலாம்.

"இல்லற இன்பத்தை வெறுத்துத் துறவு பூண்டவனை விட உண்மையிலேயே உள்ளத்திலே துறவு பூண்டவன் உயர்ந்தவன்.

மனத்ததால் எந்த இன்பத்தையும் எண்ணாமல் தன்னலத்தை துறந்து வாழும் உள்ளத் துறவுள்ளவன் சாதாரண துறவியைவிட நூறுகோடி மடங்கு உயர்ந்தவன்.

இவனைக் காட்டிலும் உயர்ந்தவன் , சொல்ல முடியாத பெருமையுள்ளவன் யாரென்றால்?

குற்றமற்ற கல்வி கற்றவன். கற்றதோடு மட்டும் நில்லாமல் அறிவு நெறியிலே நிற்பவன்.

அறிவு நெறியிலே நிற்பதோடு நல்வினை, தீவினைப் பலன் களிலே நாட்டம் இல்லாமல் தன் கடமையைச் செய்து வாழ்கின்றவன் -- ஆகிய இத்தகையவனே அளவிட முடியாத பெருமையுள்ளவன் என்கிறார் பட்டினத்தார்.


இப்பாட்டின் பொருளை நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் கீழக்கண்ட முடிவுக்குத்தான் வரவேண்டும்.

உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு" என்பார் அருட்தந்தை வேதாத்திரி மகரிசி.

நன்றி பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும்.....அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

## பற்றற்ற நிலை வேண்டும்.(நிலையாமை)

தேவையுணாவாலும் , தொடர்ந்து வந்த பழக்கத்தாலும் கிடைத்துள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் அறிவின் வளர்ச்சிக்கேற்றவாறு ஒவ்வொரு மனிதனும் தேசம், மதம், சாதி, மொழி, இனம். பொருட்கள், பந்துக்கள் என்றவைகள் மீது உரிமை கொண்டாடுகிறான்.



அந்ததந்த எல்லையில்,குறுகியும் நிற்கிறான். இத்தகைய நினைவை நிலையை பற்று என்று சொல்லுகிறோம். ஆனால் உயிர் நிலையை அறிந்துகொண்ட பேரறிவின் சிகரமே பற்றற்ற

நிலையாகும்." என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிசி.

நாம் பிறந்த ஊர் நிலையனாது அன்று. விதிவசத்தால் வந்த உறவினர்களும் நிலையானவர் அல்லர்.

மிகவும் வருந்தி உழைத்துப் பெற்ற நற்பெயரும் (புகழும்) நிலையனது அன்று. கட்டிய மனைவி நிலையானவள் அல்லள்.

பெற்ற பிள்ளைகளும் நிலையையானவர் அல்லர். அப்பிள்ளைகளால் பெறும் சிறப்பும் நிலையனாது அன்று.

ஈட்டிய செல்வம் நிலையானது அன்று. இந்த உலகத்தில் யாரும் நிலையானவர் அல்லர். நினது திருவடி மட்டுமே நிலையானது என்கிறார் பட்டினத்தார்.

ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளைகளும்
சீரும் சதமல்ல, செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்றாள் சதம் கச்சி ஏகம்பனே! (பட்.பா.17 திருஏகம்பமாலை.13)

என்னை அடிமையாகக் கொண்ட இறைவனே! என்னைப் பெற்ற தாயும் "பிணம்" என்று சொல்லி இகழ்ந்து கைவிட்டார்.

பொருளை என்னிடம் பெற்று வாழ்வை நடத்தி வந்த மனைவியும்"போ" என்று சொல்லி அழுது புலம்பி விட்டார்.

பெருமை பெற்ற பிள்ளைகளும் ஈமத்தை வலமாக வந்து கொள்ளி வைப்பதன் முன் குடம் உடைத்து விட்டார்.

எனவே இப்பொழுது உன்னைத் தவிர வேறு பற்று இல்லாதவன் ஆகிவிட்டேன் என்று புலம்புகிறார் பட்டினத்தார்.

"என்பெற்ற தாயரும் என்னைப் பிணம்என்று இகழ்ந்துவிட்டார்

பொன்பெற்ற மாதரும்போஎன்று சொல்லிப் புலம்பிவிட்டார்

கொன்பெற்ற மைந்தரும் பின் வலம் வந்து குடம்உடைத்தார்

உன்பற்ற ஒழிய ஒருபற்றும் இல்லை உடையவனே. (பட்.பா.69)

பற்றற்ற பழக்கம் வழக்கமாகிவிட ஒரு தந்திரம் சொல்கிறார் வேதாத்திரி மகரிசி.

”நெற்றியில் உச்சியில் ஞாபகமாயிரு,
உற்றுற்றுப் பார்த்திடு உன்னை உலகை பின“,
கற்றபடி நட கருத்து விழிப்புடன்,
பற்றற்று வாழும்பழக்கம் உண்டாகிவிடும்.

## வெறுக்கத்தக்க சில மனிதர்கள்...*

வெறுக்கத்தக்க சில மனிதர்கள் உள்ளார்கள், மற்றவர்கள் பார்த்து அஞ்சத்தக்க மனிதர்கள் உள்ளனர், அவர்கள் யார் என்பதை நாம் அறியவேண்டும்,

அத்தகைய மனிதர்களிடம் நாம் எப்போதும் கொஞ்சம் பாதுகாப்புடனேயே நடந்து கொள்ள வேண்டும்.

அம் மனிதர்கள் யார் என்று பட்டினத்தார் சொல்கிறார்,

அனைவருக்கும் புரியும் விதமாக மிகத்தெளிவாக அம்மனிதர்கள் பற்றிச் சொல்கிறார்.

வீண் வாதத்துக்கும் வீண் சண்டைக்கும் போவார்கள், வாதுக்கு வரமாட்டோம் என்றாலும், சண்டைக்கு வரமாட்டோம், என்றாலும், விடமாட்டார்கள் , வலிய இழுப்பார்கள்.

நன்மைக்கு உதவி செய்யார், தீமை என்றால் அதற்கு உதவ தயங்கமாட்டார்.

தினந்தோறும், துன்பப்பட்டு வஞ்சகம் செய்து பணம் சேர்ப்பார், அந்தப் பணத்தை தான் விரும்பும் ஒரு பெண்ணுக்கு கொடுத்து அவள் ஆசையிலே மயங்கிக் கிடப்பர்.

அதாவது தான் சாகும் வரை இப்படியே நாளைப் போக்குவர். இப்படிப் பட்ட மனிதர்கள் இவ்வுலகில் ஏன் பிறந்தார்கள், இறைவனே என்று பாடுகிறார்.

வாதுக்குச் சண்டைக்குப் போவார். வருவார் வழக்குரைப்பார்

தீதுக்கு உதவியும் செய்திடு வார்தினம் தேடி ஒன்று

மாதுக்கு அளந்து மயங்கிடு வார்விதி மாளும்மட்டும்

ஏதுக்கு இவர் பிறந்தார் இறைவா கச்சி ஏம்பனே." (பட்.பா.18)

சிலமனிதர்கள் உண்மை என்பதையே பேசி அறிய மாட்டார்கள், நல்லவர்களை ஒருநாளும் போற்ற மாட்டார்கள்.

நல்லோரை நிந்திப்பதையே கொள்கையை இருப்பார்கள்.

வசை பாடுவதற்கு இன்னார் என்று பாராமல் தன்னைப் பெற்று வளர்த்த தாயையே திட்டுவார்கள்,

வணங்க வேண்டிய தாயையே பழித்துப் பேசும் இவர்கள் பயங்கரமானவர்களே.

நல்ல செயல்களைப் பற்றி சிந்திக்கவே மாட்டார்கள். மற்றவர்களை எந்த வம்பில் மாட்டி விடலாம் என்று சதா சதி திட்டம் போடுவார்கள்.

தமக்காக உளைத்தவர்களுக்குக் கூட உபகாரம் செய்யாத இவர்கள் இருப்பதால் எவருக்கும் லாபமில்லை, இவர்கள் இறந்தாலும் நட்டமில்லை என்கிறார் பட்டினத்தார்.

"ஓயாமல் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற

தாயாரை வைவர் சதி ஆயிரம் செய்வர் சாத்திரங்கள்

ஆயார் பிறர்க்கு உபகாரம் செய்யார் தடை அண்டினர்க்கு ஒன்று

ஈயார் இருந்து என்ன போய் என்ன காண கச்சி ஏகம்பனே." (பட்.பா.18)

ஆகவே , இவ்வாறான மனிதர்களிடமிருந்து விலகி, மனித சமுதாயத்திற்கு உதவும் உத்தமர்களா வாழுங்கள், பண்புள்ள மனிதர்களாக வாழுங்கள்! என்கிறார் பட்டினத்தார்.

"உணர்ந்து திருந்து என்கிறார் வேதாத்திரியார்.

"பெருந்துன்பம் உனக்கோ பிறருக்கோ உன்னால் வந்தால்

வருந்து. நீ முயற்சி செய்!

வழிகாண்! ஈடாற்றிடத்

திருந்திடு, பிறரையும்
திருத்திடு, உலகுக்கு
விருந்திடு. நல்வாழ்வின்
வித்தாம் இவ்வொழுக்கத்தால்" (ஞானகளஞ்சியம் பாக.1.பா.622)

திருந்தி வாழவும் வழிகாட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

"பழக்கமே பற்றாக! பாசமாக!
பரிணமித்துச் சிக்கல் வாழ்விலாச்சு.
இழக்கின்றோம் இயற்கைவள இன்பமெல்லாம்.
இதையுணர்ந்து ஏற்றபடித் திருந்தி வாழ்வோம்." (ஞானக்களஞ்சியம் பாக.1.பா.6223)

## கணக்கெடுக்கும் பட்டினத்தாரும் வேதாத்திரியாரும்

வணிகம் செய்கிறவர்கள் வரவு செலவுகளைக் கணக்கிட்டு, ஆகமொத்தம் இந்த வணிகத்தால் நமக்கு வந்த ஊதியம் அல்லது இழப்பு இவ்வளவு என்று மதிப்பிட்டுக் கொள்வார்கள்.

அதைப்போல, வாழ்வின் வரவுசெலவுகளைக் கணக்கிட்டு இந்த முறையிலான வாழ்வினால் நமக்கு வந்த ஊதியம் அல்லது இழப்பு இவ்வளவு என்று மதிப்பிட்டுக்கொள்ள முடியுமா?

தாயுமானவர் ஒரு கணக்கெடுக்கிறார்:

*...யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்*

*உறங்குவதும் ஆகமுடியும்;*

*உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே*

*ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்*

*பாசக் கடற்குளே வீழாமல் மனதுஅற்ற*

*பரிசுத்த நிலையைஅருள்வாய்,*

*பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற*

*நிறைகின்ற பரிபூரணானந்தமே.* (*தாயுமானவர், பரிபூரணானந்தம்*, 10)

கணக்கெடுத்துப் பார்த்தால், பசி தீரச் சாப்பிட்டிருக்கிறோம்; படுத்து உறங்கியிருக்கிறோம். அல்லாமல் வேறென்ன?

உள்ளதே போதும் என்று ஒரு பொழுதேனும் தோன்றியிருக்கிறதா?

'நான், நான்' என்னும் அறிவற்ற குளறல் என்றைக்காவது அற்றுப் போயிருக்கிறதா?

அதை விடுவோம், தாவி இதைப் பிடிப்போம்; இதை விடுவோம், தாவி வேறொன்றைப் பிடிப்போம்;

தாவித் தாவிப் பிடித்துக் கடைசியில் பிடிமானமில்லாமல் பற்றாகிய பாழங்கடலுக்குள் விழுந்து அமிழ்வோம்.

அல்லாமல் வேறென்ன?

அவ்வாறெல்லாம் ஆகிவிடாமல், இனி என்னைப் புதிய உயிர் ஆக்கி, மனம் தன்னை மிகத் தெளிவு செய்து, என்றும் ஆனந்தம் கொண்டிருக்கச் செய்வாய் என்று பரிபூரண ஆனந்தத்தை வேண்டுகிறார் தாயுமானவர்.

முற்றத் துறக்கும் முன், அரசக் கணக்கெழுதியவர் தாயுமானவர்.

முற்றத் துறக்கும் முன், வணிகக் கணக்கெழுதியவர் பட்டினத்தார்.
வாழ்வாங்கு வாழ்வதற்கு கணக்கெழுதியவர் வேதாத்திரி மகரிசி.

தாயுமானவரைப் போலவே பட்டினத்தாரும் வாழ்க்கைக் கணக்கெடுக்கிறார்:

*உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும்,*

*அடுத்து அடுத்து உரைத்ததே உரைத்தும்,*

*கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்*

*கழிந்தன கடவுள் நாள் எல்லாம்;*

*விண்டதா மரைமேல் அன்னம்வீற்று இருக்கும்*

*விழவுஅறா வீதிவெண் காடா,*

*அண்டரே போற்ற அம்பலத்து ஆடும்*

*ஐயனே, உய்யுமாறு அருளே.* *(பட்டினத்தார், திருவெண்காட்டுத் திருவிசைப்பா).:*

உண்டதைத்தான் உண்கிறோம்; உடுத்ததைத்தான் உடுக்கிறோம்; பேசியதையே திரும்பத் திரும்பப் பேசுகிறோம்;

பார்த்ததையே பார்க்கிறோம்; கேட்டதையே கேட்கிறோம். திரும்பிப் பார்த்தால், ஐயோ, கடவுளைக் கண்டு கொள்வதற்காக வழங்கப்பட்ட நாட்களை அல்லவா வீணாக்கியிருக்கிறோம்?

திருவெண்காட்டு ஈசா, இவ்வாறு உழற்றாமல், என்னைச் சரியான திசைக்குத் திருப்பி ஆட்கொள்ள மாட்டாயா?

தற்சோதனை என்னும் கணக்கைப் பார்க்கச் சொல்லுகிறார் வேதாத்திரி மகரிசி.

தற்சோதனை மனித சமுதாயத்திற்கு, மனித இனத்துக்கு மிக மிக அவசியமானது. இதுவரையில் நாம் பழக்கத்தின் வழியில் சென்று வருகின்றோம்.

இந்தப் பழக்கத்திலிருந்து ஒரு மாற்றம் பெற வேண்டுமானால் ஒரு சிறந்த வாழ்க்கை நலம் தரும் விளக்கம் வேண்டும்.



நாம் எதற்காக வாழ்ந்து வருகின்றோம்? எங்கிருந்து வந்திருக்கிறோம்? எங்கே போகிறோம்? நம்முடைய வாழ்வின் நோக்கம்தான் என்ன? என்ற கேள்விகளை எழுப்பிக்கொண்டு பார்த்தோமானால் இன்று இல்லாவிட்டாலும்கூட, வரவர சிறுகச் சிறுக நம் அறிவுக்குள்ளாகவே இயற்கை ரகசியங்கள் எல்லாம் புதைந்து இருப்பதனால் வாழ்வுக்கான விளக்கங்கள் தெளிவாகத் தெரிந்துவிடும்.

ஆறாவது அறிவைக் கொண்ட இந்த மனித வாழ்வின் நோக்கம், அறிவு முழுமை பெற வேண்டும். இயற்கையின் முழுமையை உணர வேண்டும்.

எந்தச் சக்தியிலிருந்து நாம் தோன்றி வந்து இயங்கிக் கொண்டிருக்கிறோமோ அந்த அடிப்படையை உணர்ந்து அதோடு லயமாகி இணைந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும்.

.

இதுதான் பிறவியின் நோக்கம் (This and this alone is the purpose of life). அதற்குத் தடையான போக்கு நம்மிடத்திலே என்னென்ன உண்டு என்பதைக் கண்டுபிடித்து,

படிப்படியாக அதையெல்லாம் எளிமைப்படுத்தப்பட்ட குண்டலினி யோகத்தை (Simplified Kundalini Yoga) பயின்று அதன் மூலம் மாற்றி நம்மைத் திருத்திக்கொண்டு உயர்ந்து அந்த நிலையை அடைய வேண்டும்.

இந்த உணர்தலும் அப்படி உணர்ந்த வழியே திரும்பி உயர்ந்து அதுவாகவே மாறுவதும் தான் ஆன்மீக வாழ்வு."

## அறிந்ததைக் கணக்கெடுக்கும் திருமூலர்

தாயுமானவரைப் போலவும் பட்டினத்தாரைப் போலவும் கணக்கெழுதும் பயிற்சி உள்ளவரா திருமூலர் என்று தெரியவில்லை.

என்றாலும் அவரும் கணக்கெடுக்கிறார். ஆனால், இவர் போடும் கணக்கு கொஞ்சம் வேறாக இருக்கிறது.

தாயுமானவரும் பட்டினத்தாரும் உண்டதை, உடுத்தியதைக் கணக்கெடுக்கிறார்கள். திருமூலர் அறிந்ததைக் கணக்கெடுக்கிறார்:

*உற்றுஅறிவு ஐந்தும், உணர்ந்துஅறிவு ஆறுஏழும்,*

*கற்றுஅறிவு எட்டும், கலந்துஅறிவு ஒன்பதும்,*

*பற்றிய பத்தும், பலவகை நாழிகை*

*அற்றது அறியாது அழிகின்ற வாறே (திருமந்திரம் 741)*

- மெய், வாய், கண், மூக்கு, செவி என்று புலன்களின் வழியாக உற்று அறிந்த வகையில் அறிவு ஐந்து;
- புலன்களால் உற்று அறிந்தவற்றையெல்லாம் மனத்தினுள் வாங்கிக் கொண்ட வகையில் அறிவு ஆறு;
- வாங்கிக் கொண்டவற்றையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்து, உணர்ந்துகொண்ட வகையில் அறிவு ஏழு
- முற்றறிவு பெறுவதற்கு, உற்றும் உணர்ந்தும் அறிந்தவை போதாதென்று, அறிஞர் பெருமக்கள் உணர்ந்து சொன்னவற்றைக் கசடறக் கற்று அறிந்த வகையில் அறிவு எட்டு;
- கசடறக் கற்று, அறிந்தவற்றுக்குத் தக நின்று, தானே பட்டும் அறிந்த வகையில் அறிவு ஒன்பது;
- பட்டு அறிந்தவற்றையெல்லாம் 'தனது' என்று பற்றிக்கொண்ட வகையில் அறிவு பத்து.

அறிந்தாலும் என்ன, அறியாவிட்டாலுந்தான் என்ன என்று கருதத்தக்க அற்பங்களையெல்லாம் அறிவதிலேயும் அவற்றைத் தனதாக்கிப் பற்றிக் கொள்வதிலேயும் காலம் கழிகிறது.

காலம் கழிகிறது என்பதையே அறியாமல், ஐயோ, வாழ்வு அழிகிறதே?

### தளைப்படுத்துவது எது?

அறிவுதான் விடுதலை செய்யும். விடுதலை செய்ததா என்று கணக்குப் பார்த்தால் செய்யவில்லை. என்றால் என்ன கோளாறு?

விடுதலை தருவது எதுவோ அதை அறிந்து அதில் ஈடுபடாமல், தளைப்படுத்துவது எதுவோ அதை அறிந்து அதில் ஈடுபட்டது.

*கொங்குபுக் காரொடு வாணிபம் செய்தது*

*அங்குபுக் கால்அன்றி ஆய்ந்துஅறி வார்இல்லை;*

*திங்கள்புக் கால்இருள் ஆவது அறிந்திலர்;*

*தங்குபுக் கார்சிலர் தாபதர் ஆமே.* (திருமந்திரம் 2930)

## அருட்புலம்பல் அருட்புலம்பல்

அருள் புலம்பல் என்பது, அருள் நோக்கத்துடன் புலம்புவது என்று பொருள்படும். இறைவன் அருளை வேண்டிப் புலம்புதல் என்றும் பொருள் கொள்ளலாம்.

பட்டினத்தார் பாடலிலே அருட் புலம்பல் என்று ஒரு பகுதி உண்டு. அதில் உள்ள பாடல்கள் இரண்டு அடிகள் கொண்ட கண்ணிகள்.

அவைகளில் பல உண்மைகள் காணப்படுகின்றன. யோக மார்க்கத்தை வலியுறுத்திக் கூறும் கண்ணிகளும் அவைகளில் உண்டு. வேதாத்திரி மகரிசி பாடல்களில் அருட் புலம்ப ல கிடையாது. மகிழ்ச்சியாகவே சாதகனை வேதாத்திரியம் அழைத்துச் செல்கிறது.

இறைவன் வேறு எங்கும் இல்லை. நமது உடம்புக்குள் தான் இருக்கின்றான். யோகத்தால் - நிஷ்டையால் - தியானத்தால் அவனை நம்முள்ளேயே காணலாம் என்று வலியுறுத்தும் பாடல்களைக் காணலாம்.

"முக்கு முனையை முழித்திருந்து பாராமல்

ஆக்கைகெட்டு நானும் அறிவிழந்தேன் பூரணமே!"

"பூரணமே! மூக்கின் நுனியென்னும் சுழுமுனையைக் கண்விழித்துப் பார்ப்பதாகிய கோகத்தில் ஈடுபடாமல், எனது உடலும் கெட்டு. அறிவும் அழிந்தேன்."

இவ்வடிகள் யோகத்தின் இயல்பை எடுத்துக் காட்டின. உள்ளத்தை ஒருவழிப்படுத்துவதாகிய தியானத்தால் - யோகத்தால் -உடல்நலம் பெறலாம்.

தேகத்தை, தியானத்தை அலட்சியம் செய்வோர் உடல் உறுதி குலைவர். நோய்களுக்கு ஆளாகி வருந்துவர்.

தியானத்தில் யோகத்தில் எப்படி செல்வது?

" ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலேநிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கைமுறை சிறப்புடைத்து ஈதே தவமாம்."(ஞா.க.1473)

உடம்பின் ஆறு ஆதாரமான மூலாதாரம், சுவாதிஷ்டானம், அனாகதம், மணிப்பூரகம், விசுக்தி, ஆக்கினை என்று சொல்லக்கூடியவற்றில் ஆக்கினை என்னும் நெற்றிப்போட்டில், அனுபவபூர்வமாக தியானத்தினாலும், யோகத்தினாலும் ஒளிவடிவில் இறைவனைக் கண்டவர்கள் சித்தர்கள்.

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே! - சிவவாக்கியர்.

"கடவுள் எல்லா  மாக இருக்கிறார். நானுமாக இருக்கிறார். எனவே எனக்கும் கடவுளுக்கும் ஒரு சங்கிலிப் பிணைப்பு இருக்கிறது. அதன் ஒரு முனை நான், இன்னொரு முனை அவர் என்னும்போது, இந்தச் சங்கிலியைப் போட்டுவிட்டு அவரை எங்கே போய்த் தேடினால் கிடைப்பார்?  -வேதாத்திரி மகரிஷி

மனித தேகத்திலுள்ள ஜோதியைக் கணாமல் நாடி வெளியில் தேடி, வாடி இறந்து போனவர்கள் கோடி கோடி என்கிறார். சித்தர்கள் புருவமத்தியில் இறைவனைக் கண்டவர்கள்.

மேலும் சித்தர்கள் சிறந்த சிந்தனையாளர்கள். உருவ வணக்கத்தை எதிர்த்தவர்கள்.

மனித நேயம் பேசிய புரட்சியாளர்கள். அவர்களுடைய பாடல்களை ஆராய்ந்தால் இறைமை என்பது மனிதர்கள் தங்கள் உள்ளே கடந்து அடையத்தக்க அனுபவம் என்பது புரியும்.

பட்டினத்தார்  பாடுகிறார்.....

இடைபிங் கலையின் இயல்பறி மாட்டாமல்

தடையுடனே யானும் தயங்கினேன் பூரணமே!”

பூரணமே! இடைகலை, பிங்கலை என்று சொல்லப்படும் சந்திரகலை, தன்மைகளைத் தெரிந்து கொள்ள முடியாமல் தடைப்பட்டு நின்றுவிட்டேன்.”

இவ்வடிகளும் யோக மார்க்கத்தின் உயர்வை எடுத்துக் காட்டின.

மூக்கின் இடது துவராத்தின் வழியாக வரும் மூச்சுக்கு இடைகலை என்று பெயர். இதனையே சந்திரகலை என்பர்.

மூக்கின் வலது துவாரத்தின் வழியாக வரும் மூச்சுக்குப் பிங்கலையென்பர். இதனைச் சூரியகலை என்பர்.

இவ்வாறு வரும் மூச்சைக் கட்டுப்படுத்தி ஓர் அளவில் நிறுத்துவது யோகப் பயிற்சியாகும்.

”ஊனுக்குள் நீநின்று உலவினதைக் காணாமல்

நான்என்று இருந்து நலன் அழிந்தேன் பூரணமே!”

“பூரணமே! என் உடம்பிலேயே நீ, ஜீவாத்மா பரமாத்மா என்ற பேதமின்றி ஒன்றாக நின்று உலவுகின்றாய். இதனை நான் அறியாமல், நான் என்னும் அகந்தை கொண்டேன். நன்மைகளை இழந்தேன்.”

”உடலுக்குள் நீநின்று உலாவினதைக் காணாமல்

கடல்மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே!

”பூரணமே! எனது உடம்புக்குள்ளே நீ இருந்து உலாவுகின்றதை அறியாமல், கடல் தாண்டித் தேடியும், மலைகளிலே தேடியும் கால்கள் சலித்துப் போனேன்.”

மேலே காட்டிய இரண்டு கண்ணிகளும், ”இறைவன் வேறு எங்கும் இல்லை. நமது உடம்பிலேயே உறைகின்றான். ஆத்மாவுடன்

ஒன்றுபட்டே உறைகின்றனர்" என்று பட்டினத்தர் சொல்கிறார்.
இதைத்தான் வேதாத்திரி மகரிசியும் சொல்லுகிறார்.

எல்லாம் வல்ல தெய்வமது எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன் வாழ்வில் உயிரில் அறிவுமவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க் காணும் இன்ப துன்பமவன்

அவனின் இயக்கம் அணுவாற்றல் அணுவின் கூட்டுப் பக்குவம்நீ
அவனில்தான்நீ, உன்னில் அவன் அவன்யார்? நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால்நீ சிறியோன் அவனை அறிந்தால்நீ பெரியோன்
அவன்நீ ஒன்றாய் அறிந்தஇடம் அறிவு முழுமை அதுமுக்தி"(ஞா.க.பா.2)

இந்த உண்மையை உணர்ந்தவர்கள் மனக்கவலையின்றி வாழலாம் - வாழ்வார்கள் என்று மற்றொரு கண்ணியில் பட்டினத்தார் கூறுகிறார்.

எனக்குள்ளே நீயிருக்க, உனக்குள்ளே நான்இருக்க,

மனக்கவலை தீர வரம்அருள்வாய் பூரணமே!

"நீயும் நானும் ஒன்று என்ற உண்மையை அறிந்து, எனக்குள் நீயிருக்கவும், உனக்குள் நான் இருக்கவும் செய்வாய். இப்படிச் செய்தவன்மூலம் மனக்கலையின்றி வாழ்வதற்கு வரந் தருள்வாய்" என்பதே இந்தக் கண்ணி.

---

இவ்வாறு இறைவனும் உயிரும் ஒன்று என்னும் உண்மையைப் பட்டினத்தார் வலியுறுத்தி இருக்கின்றார்.
இறைவனும் உயிரும் ஒன்று என்ற உண்மையை உணர்ந்தவர்கள் யாரிடமும் பதம் பாராட்ட மாட்டார்கள்.

எல்லா உயிர்களையும் ஒன்றெனக் காண்பார்கள். தீமை செய்ய மாட்டார்கள். மக்கள் அவைரையும் ஒன்றாகவே நேசிப்பார்கள்.

சாதி பேதங்கள் தமையறிய மாட்டாமல்

மக்களிடம் சாதி, மொழி, இன, நிற, மத பேதங்களும் பாராட்ட மாட்டார்கள். மனித குலம் - மனித இனம் ஒன்றே என்ற உண்மையை மறக்க மாட்டார்கள். இந்தஉண்மையைப் பட்டினத்தார் அருட் புலம்பலிலே காணலாம்.

"ஏழுவகைத் தோற்றத்து இருந்துவினை யாடினதைப்

பழுதறவே பாராமல்பயன்இழந்தேன் பூரணமே!"

"பூரணமே! தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊா வன, நீர்வாழ்வன, தாவரம் என்றும் ஏழு வகையான பிறப்புகளிலும் நீயே தங்கியிருக்கின்றாய். விளையாடுகின்றாய். இதனை நான் குற்றமின்றித் தெரிந்து கொள்ளாமல் வீணன் ஆனேன்."

"சாதி பேதங்கள் தமையறிய மாட்டாமல்

வாதனையால் நின்று மயங்கினேன் பூரணமே!"

"பூரணமே! சாதி வித்தியாசங்கள் பாராட்டுவது - கற்பிப்பது - தெய் வ நெறிக்கு மாறானது என்பதை அறியாமல் போனேன். அதனால் - சாதிபேதம் பாராட்டுவதனால் - விளையும் தீமையை அறியாமல் போனேன். ஆதலால் சாதிபேதம் பாராட்டித் துன்பத்திலே நின்று கலங்கினேன்."

இவ்வாறு சாதி வித்தியாசக் கொடுமையைக் கண்டித்தார். சாதி வித்தியாசம் பாராட்டுவது அறியாமை என்பதையும் எடுத்துக் காட்டினார்பட்டினத்தார்.

"கருவான நாதவிந்தில ஜாதியேது?

கற்பனையால் நாம் மிரண்டு பேசுகின்றோம்

வருநாளில் கல்வியொடு பொருளாதாரம்
வளர்ச்சிபெற்றால் ஜாதியெலாம் ஒழிந்திடாதோ?(4)

என்று ஜாதியே ஒழிய வேண்டும் என்றும் சாதி வேற்றுமைக்கு இக்காலம் பொருந்தாது என்றும் வேதாத்திரி மகரசி தெளிவுபடுத்துகிறார்.

## மனிதகுலம் ஒன்றே

"குலம் ஒன்றாய் நீபடைத்த குறியை அறியாமல்நான்

மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே!"

"பூரணமே! மனித குலத்தை ஒன்றாகவே நீ படைத்திருக்கும் கருத்தை நான் தெரிந்து கொள்வில்லை. மனம் நிறைந்த பாண்டமாகிய இந்த உடம்பில் நான் கட்டுப் பட்டிருந்து கலங்கினேன்."

இந்த அடிகளும், மனிதகுலம் ஒன்றே என்பதை எடுத்துக் காட்டின. எந்நாட்டு மனிதர் ஆயினும், எந்நிற இனத ராயினும் எல்லார் இயல்பும் ஒன்றுதான்.

மனித உடல், நரை திரை, மூப்பு, பிணங்களுக்கு இடமானது.

எல்லா உடல்களுக்கும் வாழ்வும் சாவும் ஒன்றுதான்.

உடம்புக்குரிய பொதுத்தன்மை, உலகில் உள்ள எல்லா மனித உடல்களும் ஒன்றுதான்.

இவ்வுண்மையை உணர்ந்தோர் மக்களுக்குள் உயர்வு தாழ்வு பாராட்டமாட்டார்கள். இவ்வுண்மையும் இக்கண்ணியிலே பொதிந்து கிடக்கின்றது.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற

எண்ணத்தால் உயர்வடைந்த தமிழன்"

என்னும் பாடலில் கணியன் பூங்குன்றனாரின் எண்ணக் கொடையை நினைவு கூர்கின்றார் வேதாத்திரி மகரிசி.

இத்தகைய சிறந்த சமரச ஞானம் படைத்தவர்கள் பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும். இவர்கள் ஒரு சமரச ஞானிகள் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிசியும் மானுடத்தை தங்களுக்கே உரிய பாதையில் அழைத்துச் செல்கின்றனர்.

அவர்கள் காட்டிய வழியில் ஆனந்தமாக பயணிப்போமாக.
ஆனந்தம்! ஆனந்தம்1 ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!

## துணைநின்ற நூல்கள்.


1. பட்டினத்தார் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர், நா. சுப்புரெட்டியார்., அய்யனார் பதிப்பகம், கூடுவாஞ்சேரி.
4. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
5. வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள், அருள்நிதி மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000. அருள்நிதி மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
7. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு